**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 13–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் –திரு.சதிஸ் **PW–51** தொழில் –

த/க பெயர் –பன்னீர் செல்வம் வயது – 37

கிராமம் –

தாலுக்கா –

**(2, 3, 4, 6 முதல் 30 வரையிலான எதிரிகள் ஆஜர் இல்லை. ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் கடலூர் மாவட்டம், ஆண்டி குப்பத்தில் குடியிருக்கிறேன். பால் வியாபாரம் செய்து வருகிறேன். நான் கடலூரில் புனித வள்ளலார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பிபிஎ பட்டப்படிப்பு 2005 முதல் 2008 ஆம் ஆண்டு வரையில் படித்தேன். படித்து முடித்த பின் வேலை இல்லாத காரணத்தினால் பால் வியாபாரம் செய்து வந்தேன். இந்த வழக்கில் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ள அ.சா.50 ஐயப்பனை எனக்கு தெரியும். அவரும் நானும் ஒன்றாக 12–ம் வகுப்பு படித்தோம், அந்த வகையில் அவர் எனக்கு நண்பர். 2010 ஆம் ஆண்டு வாக்கில் நான் எனக்கு வேலை கிடைக்காதது பற்றியும், வேலை தேடி வருவதைப் பற்றியும் என் நண்பர் ஐயப்பனிடம் சொன்னபோது அவர் குரூப் 4 தேர்வு மற்றும் குரூப் 2 தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க சொன்னார். அவர் தனக்கு தெரிந்த ஸ்ரீதர் என்பவர்

மூலமாக அரசு வேலை வாங்கித் தருவதாக சொன்னார், அதற்கு என்னிடம் பணம் இல்லை என்று சொன்னதற்கு உடனடியாக பணம் தேவையில்லை மார்க் சீட் கொடுத்தால் போதும் வேலை வாங்கிவிடலாம் என்று சொன்னார்.

அதன் அடிப்படையில் ஐயப்பனுடன் நானும் என் அண்ணியின் தங்கை கோமதியும் மெட்ராஸ் கிளம்பி 2010 ஆம் ஆண்டு அல்லது 2011 ஆம் ஆண்டு முதலில் என்று நினைக்கிறேன், வருடம் தேதி மாதம் சரியாக நினைவில்லை சென்னைக்கு ஊரம்பாக்கத்திற்கு சென்றோம். என்னுடைய 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு அசல் மதிப்பெண் சான்றிதழை ஐயப்பன் என்னிடம் இருந்து வாங்கிக் கொண்டார். ஐயப்பன் அந்த சான்றிதழ்களை ஸ்ரீதரிடம் கொண்டு போய் கொடுப்பதாகச் சொன்னார். நான் அந்த தேர்வை எழுதவில்லை. இரண்டொரு நாட்களில் கேள்வித்தாள் லீக் ஆனது என்று தகவல் தெரிந்தது. நான் ஐயப்பன் இடம் என் சான்றிதழ்களை திரும்ப பெறுவது பற்றி கேட்டது போது ஸ்ரீதரின் போனில் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று அதனால் சான்றிதழை திரும்ப பெற முடியவில்லை என்று சொன்னார், அத்தோடு நான் அந்த பிரச்சினையை விட்டு விட்டேன்.

தற்போது என்னிடம் காண்பிக்கும் பத்தாம் வகுப்பு இரண்டு மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் 12ஆம் வகுப்பு ஒரு மதிப்பெண் சான்றிதழ் என்னுடையவை தான். அவை முறையே அ.சா.ஆ.63, 64 மற்றும் 65 ஆகும். இது குறித்து சிபிசிஐடி காவல்துறை துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**1-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:- இல்லை.

Digitally signed by K KRISHNA PRIYA

<u>4, 6 முதல் 9, 11, 12, 18, 19, 22 முதல் 24, 26 முதல் 30-ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

தற்போது நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்ன அதே விவரங்களை தான் சிபிசிஐடி காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்த போதும் நான் சொன்னேன் என்றால் ஆமாம். அவர் விசாரித்தபோது ஸ்ரீதர் ராஜை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், நான் நேரடியாக அவரிடம் சான்றிதழ் கொடுக்கவில்லை என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். சிபிசிஐடி காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்த போது நான் என்னுடைய சான்றிதழ்களை அ.சா50 ஐயப்பனிடம் ஊரப்பாக்கத்தில் வைத்து கொடுத்ததாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரி. ஐயப்பனிடம் சான்றிதழ்களை நான் திருப்பி கேட்ட போது ஸ்ரீதர் ராஜ் போனை எடுக்கவில்லை என்று அவர் என்னிடம் சொன்னதாக முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள விபரத்தை சிபிசிஐடி காவல்துறை துணை கண்காணிப்பாளர் விசாரித்த போது சொல்லவில்லை என்றால் சரி. எத்தனை காலம் தொடர்ந்து ஐயப்பன் இடம் சான்றிதழ்களை நான் திருப்பி கேட்டு வந்தேன் என்றால் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் கேட்டு வந்தேன்.

ஐயப்பன் அவர் புதுப்பேட்டை காவல் நிலையத்தில் அவருடைய சான்றிதழ்கள் தொலைந்து விட்டதாக புகார் கொடுத்ததாக ஏதும் என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. ஐயப்பன் என்னிடம் சான்றிதழ்களை வாங்கிவிட்டு திருப்பித் தரவில்லை என்று இன்றைய தேதி வரையில் நான் புகார் ஏதும் அளிக்கவில்லை என்றால் சரி. ஐயப்பன் என்பவர் என்னை சந்திக்காமல் இருந்திருந்தால் என்னுடைய சான்றிதழ்களை நான் யாரிடமும் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரி. சிபிசிஐடி காவல்துறையினர் என்னிடம் என்னுடைய சான்றிதழ்களை காண்பித்து விசாரணை ஏதும் செய்யவில்லை என்றால் சரி.

Digitally signed by K KRISHNA PRIYA

ஐயப்பனிடம் கடைசியாக நான் சான்றிதழ்களை கொடுத்த பின்பு இன்று நீதிமன்றத்தில் தான் முதன்முறை அவற்றை மீண்டும் பார்க்கிறேன் என்றால் சரி.

சிபிசிஐடி போலீஸிடம் என்னுடைய சான்றிதழ்களை நான் ஐயப்பனிடம் கொடுத்ததாக சொன்ன பின்பு ஐயப்பனின் வீட்டிற்கு போலீஸ் சென்று சோதனை செய்த சான்றிதழ்களை பெற்றுக் கொண்டார்களா என்றால் அது எனக்கு தெரியாது. போலீஸ் கேட்டுக்கொண்டதற்கு இணங்க முதல் விசாரணையில் நான் பொய்சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.த.சா.63 முதல் 65 வரையிலான மதிப்பெண் சான்றிதழ்களுக்கும் ஸ்ரீதராஜுக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரி.

**4, 6 முதல் 9, 11, 12, 18, 19, 22 முதல் 24, 26 முதல் 30-ம் வரையிலான எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2, 3, 10, 13, 14, 15, 16, 17, 20, 21 மற்றும் 25எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**அரசு தரப்பு வழக்கறிஞர் கோப்புகளை பார்த்துவிட்டு சாட்சியிடம் 164 வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ள விவரம் தற்போது தான் தெரியவந்துள்ளது என்றும், இது தொடர்பாக சாட்சியிடம் மறுவிசாரணை செய்ய வேண்டும் என்றும் அனுமதி கூறினார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் அவ்வாறு அனுமதி வழங்க இயலாது என்று ஆட்சேபனை தெரிவித்தார்கள் நீதியின் நலனை கருதியும் கால விரயத்தை தவிர்க்கும் பொருட்டும் அரசு தரப்புக்கு மறு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு மறு விசாரணை:-**

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் காவல்துறை கண்காணிப்பாளரிடம் கொடுத்த

Digitally signed by K KRISHNA PRIYA

வாக்குமூலத்தை தவிர வேறு எங்கேயும் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம் கம்பைநல்லூர், பாலக்கோடு நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்துள்ளேன். மேற்படி வாக்குமூலம் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரி. அந்த வாக்குமூலம் அ.சா.ஆ.66 ஆகும். மேற்படி வாக்குமூலத்தில் நடந்த விபரங்களை தான் நான் சொல்லியுள்ளேன்.

**4, 6 முதல் 9, 11, 12, 18, 19, 22 முதல் 24, 26 முதல் 30-ம் எதிரிகள் தரப்பில் மறுவாக்குமூலம்:-**

பண்ருட்டி வட்டம் கடலூரில் உள்ளது என்றால் சரி. கம்பைநல்லூர் என்பது தர்மபுரி மாவட்டத்தில் உள்ளது என்றால் சரி. பாலக்கோடு எந்த மாவட்டத்தில் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. காவல்துறையினர் நீதித்துறை நடுவர் பாலக்கோடு ஆஜர்படுத்துவதற்காக கம்பைநல்லூர் காவல் நிலையத்திற்கு என்னை வரவழைத்தார்கள் என்றால் ஆமாம். மார்க் ஷீட்டை தவிர இந்த வழக்கு சம்பந்தமான எந்த விவரமும் காவல்துறையினர் எனக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரி. நான் இன்று நீதிமன்றத்தில் சொன்ன சாட்சியம் உண்மையானது என்றால் ஆமாம். இன்று நான் இந்த நீதிமன்றத்தில் அசல் ஆவணங்களை எடுத்துக் கொண்டு எங்கு சென்றேன் என்று கூறியுள்ள சங்கதிகளை தவிர பாலக்கோடு நீதித்துறை நடுவர் முன்னால் சொன்ன மற்ற விவரங்கள் எதுவும் உண்மையல்ல என்றால் சரி. சிபிசிஐடி டிஎஸ்பி என்னை கம்பைநல்லூரில் வைத்து விசாரிக்கவில்லை என்றால் சரி. கம்பைநல்லூர் போலீஸ் என்னை விசாரித்த பின்பு வேறு எங்கேயும் போலீஸ் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரி.

**மறுவிசாரணை இல்லை.**

Digitally signed by K KRISHNA PRIYA